BANKOFSINGAPORE

பேங் ஆப் சிங்கப்பூர் லிமிட்டெட்
நிறுவன பதிவு எண்: 197700866R
பதிவு அலுவலகம்: 63 சூலியா ஸ்திரீட்
#10-00 OCBC சென்டர் கிழக்கு, சிங்கப்பூர் 049514

**முக்கியம்**

கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான நிதித் தகவலில் பேங் ஆப் சிங்கப்பூர் லிமிட்டெட்டின் 2022 டிசம்பர் 31ல் முடிவுற்ற நிதியாண்டுக்குரிய தணிக்கையான நிதியறிக்கைகளில் உள்ள தகவல்களின் சுருக்கம் மட்டுமே இருக்கிறது ('நிதிநிலை அறிக்கைகள்'). வங்கியின் நிலவரங்களையும் பலாபலன்களையும் முற்றிலும் புரிந்துக் கொள்வதற்கு அனுமதிக்கும் போதிய தகவல்கள் இவற்றில் இல்லை. மேல் விவரங்களுக்கு முழுமையான தணிக்கை செய்யப்பட்ட நிதியறிக்கையைப் பார்க்க வேண்டும். இவற்றை 63 சூலியா ஸ்திரீட் #10-00, OCBC Centre East, சிங்கப்பூர் 049514 முகவரியில் உள்ள வங்கியின் பதிவுபெற்ற அலுவலகத்தில் கேட்டுப் பெறலாம்.

# இருப்புநிலைக் குறிப்பு
## 2022 டிசம்பர் 31ல் நிலவியபடி

| | 2022<br>US$'000 | 2021<br>US$'000 |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| ரொக்கமும் மத்திய வங்கிகளில் உள்ள இருப்பும் | **155,965** | 118,783 |
| வங்கிகளிலுள்ள இருப்புகள், வைப்புகள் மற்றும் வங்கிகளுக்குக் கொடுத்த கடன்கள் | **301,597** | 654,632 |
| வங்கி அல்லாத வாடிக்கையாளர்களுக்குக் கடன்களும் முன்பணங்களும் | **18,209,253** | 21,756,123 |
| ஹோல்டிங் நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய தொகை | **17,147,069** | 9,831,903 |
| சார்புள்ள நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய தொகை | **7,297** | 4,774 |
| டெரிவேட்டிவ் நிதி அம்சங்கள் | **698,881** | 678,717 |
| இதர முதலீடுகள் | **770,795** | 757,965 |
| இதர சொத்துகள் | **1,381,529** | 1,371,353 |
| துணை நிறுவனங்கள் | **27,614** | 28,094 |
| சொத்து, ஆலை மற்றும் சாதனம் | **116,629** | 127,363 |
| கண்கூடற்ற சொத்துகள் | **23,100** | 28,998 |
| நல்லெண்ண மதிப்பு | **167,764** | 167,764 |
| **மொத்த சொத்துகள்** | **39,007,493** | 35,526,469 |
| **பொறுப்புகள்** | | |
| வங்கி அல்லாத வாடிக்கையாளர்களின் வைப்புகள் | **32,925,483** | 29,505,856 |
| வங்கிகளின் வைப்புகளும் இருப்புகளும் | **29,247** | 2,910 |
| ஹோல்டிங் நிறுவனங்களுக்குச் சேரவேண்டிய தொகை | **1,816,736** | 1,768,552 |
| சார்புள்ள நிறுவனங்களுக்குச் சேரவேண்டிய தொகை | **26,205** | 23,847 |
| டெரிவேட்டிவ் நிதி அம்சங்கள் | **680,490** | 647,015 |
| இதர பொறுப்புகள் | **1,507,071** | 1,499,169 |
| செலுத்தவேண்டிய நடப்பு வரி | **44,972** | 48,274 |
| தள்ளிவைக்கப்பட்ட வரிப் பொறுப்புகள், நிகரம் | **6,205** | 5,614 |
| **மொத்த பொறுப்புகள்** | **37,036,409** | 33,501,237 |
| **வங்கியின் பங்குமுதல்தாரருக்குரிய பங்குமுதல்** | | |
| பங்கு மூலதனம் | **996,377** | 996,377 |
| இதர பங்குமுதல் அம்சங்கள் | **200,000** | 200,000 |
| இதர காப்புநிதி | **4,834** | (642) |
| ஒன்றுதிரட்டப்பட்ட லாபம் | **769,873** | 829,497 |
| **மொத்த பங்குமுதல்** | **1,971,084** | 2,025,232 |
| **மொத்த பங்குமுதலும் பொறுப்புகளும்** | **39,007,493** | 35,526,469 |

# விரிவான வருமான அறிக்கை
## 2022 டிசம்பர் 31ல் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரியது

| | 2022<br>US$'000 | 2021<br>US$'000 |
|---|---|---|
| வட்டி வருமானம் | **735,500** | 294,192 |
| வட்டிச் செலவு | **(328,920)** | (22,007) |
| **நிகர வட்டி வருமானம்** | **406,580** | 272,185 |
| நிகர கட்டணமும் தரகு வருமானமும் | **325,127** | 466,128 |
| நிகர வர்த்தக வருமானம் | **205,480** | 224,932 |
| இதர வருமானம் | **2,339** | 3,625 |
| **வட்டியில்லா வருமானம்** | **532,946** | 694,685 |
| **நடைமுறைச் செலவுகளுக்கு முந்திய மொத்த வருமானம்** | **939,526** | 966,870 |
| ஊழியர் செலவு | **(405,540)** | (432,998) |
| சொத்து, ஆலை, சாதனத் தேய்மானம் | **(37,241)** | (36,656) |
| இதர நடைமுறை செலவு | **(164,037)** | (120,415) |
| **மொத்த நடைமுறை செலவு** | **(606,818)** | (590,069) |
| **அலவன்ஸுக்கு முந்திய நடைமுறை லாபம்** | **332,708** | 376,801 |
| கண்கூடற்ற சொத்துகள் கடன்தீர்ப்பு | **(5,898)** | (5,898) |
| நட்ட அலவன்ஸ் | **(49,556)** | (3,549) |
| **வருமான வரிக்கு முந்திய லாபம்** | **277,254** | 367,354 |
| வருமான வரி செலவு | **(40,272)** | (51,410) |
| **ஆண்டுக்குரிய லாபம்** | **236,982** | 315,944 |

# விரிவான வருமான அறிக்கை
## 2022 டிசம்பர் 31ல் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரியது

| | 2022<br>US$'000 | 2021<br>US$'000 |
|---|---|---|
| ஆண்டுக்குரிய லாபம் | **236,982** | 315,944 |
| **இதர விரிவான வருமானம்:** | | |
| **லாபம் அல்லது நட்டத்தில் மறுபகுப்புச் செய்யப்படமாட்டாத அம்சங்கள்:** | | |
| FVOCI-ல் கடன் முதலீடுகளின் நிகர ஆதாயம் / (நட்டம்), வரியின் நிகரம் | **(2,787)** | 73 |
| **லாபம் அல்லது நட்டத்தில் மறுபகுப்புச் செய்யப்படமாட்டாத அம்சங்கள்:** | | |
| திட்டவட்டமான அனுகூலத் திட்டத்தின் மறுகணக்கீடுகள் | **263** | 690 |
| FVOCI-ல் பங்குமுதல் முதலீடுகளின் நிகர ஆதாயம், வரியின் நிகரம் | **5,000** | - |
| | **2,476** | 763 |
| **ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம்** | **239,458** | 316,707 |

# MAS அறிக்கை 608 துணை விவரங்கள்
## 2022 டிசம்பர் 31ல் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரியது
## இணை விவரங்கள்

**மூலதனம்**

வெளிதரப்பில் விதிக்கப்படும் மூலதனத் தேவைகளுக்கு வங்கி உட்படுவதையும், வங்கி அதன் தொழிலுக்கு ஆதரவளித்து, பங்குதாரர்களின் மதிப்பை அதிகபட்சமாக்கும் பொருட்டு ஆரோக்கியமான மூலதன விகிதங்களை நிலைநாட்டுவதையும் உறுதி செய்வதே வங்கியின் மூலதன நிர்வாகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். நிலைப்பெற்ற கொள்கைகள், வழிகாட்டிகள், நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன.

வங்கியை மேற்பார்வையிட சிங்கப்பூர் நாணய ஆணையம் (MAS) விதித்துள்ள விதிமுறைகளையும் விகிதங்களையும் பயன்படுத்தி வங்கியின் மூலதன வளம் கண்காணிக்கப்படுகிறது.

கடந்த ஓராண்டில், MAS அறிக்கை 637-ன்படி படி 1 மூலதன வள விகிதத்திற்கும் மொத்த மூலதன வள விகிதத்திற்கும் முறையே குறைந்தபட்சம் 8% மற்றும் 10% விகிதங்களுக்கு வங்கி உட்பட்டது.

| | 2022<br>US$'மில்லியன் | 2021<br>US$'மில்லியன் |
|---|---|---|
| படி 1 மூலதனம் | | |
| சாதாரண பங்குகள் | **996** | 996 |
| வெளியிடப்பட்ட நிலையான பங்குப் பத்திரங்கள் | **200** | 200 |
| அறிவிக்கப்பட்ட காப்புநிதிகள் | **775** | 829 |
| | **1,971** | 2,025 |
| படி 1 தகுதிபெறும் மூலதனம் | **1,687** | 1,709 |
| படி 2 மூலதனம் | **1** | 1 |
| மொத்த தகுதிபெறும் மூலதனம் | **1,688** | 1,710 |
| இடர் மதிப்பு சொத்துகள் | **11,358** | 9,991 |
| படி 1 மூலதன வள விகிதம் | **14.9%** | 17.1% |
| மொத்த மூலதன வள விகிதம் | **14.9%** | 17.1% |

# பேங் ஆப் சிங்கப்பூர் லிமிட்டெட் வங்கியின் உறுப்பினர்களுக்கு சுயேச்சை தணிக்கையாளர்களின் அறிக்கை

**நிதி அறிக்கைகளின் தணிக்கை குறித்த அறிக்கை**

**எங்கள் கருத்து**

எங்கள் கருத்துப்படி, Bank of Singapore Limited-ன் ("வங்கி") இணைக்கப்பட்டுள்ள நிதி அறிக்கைகள், சிங்கப்பூர் கம்பெனிகள் சட்டம் 1967 (சட்டம்) சட்டப்படியும் சிங்கப்பூர் நிதிநிலை தாக்கல் தரங்களின்படியும் (FRSs), முறையாகத் தயாரிக்கப்பட்டு, 31 டிசம்பர் 2022 நிலவிய வங்கியின் நிதிநிலையையும், அத்தேதியில் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய வங்கியின் நிதி பலாபலன், பங்குமுதல் மாற்றங்கள், ரொக்கப் புழக்கம் ஆகியவற்றையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன.

*நாங்கள் தணிக்கை செய்தவை*

வங்கியின் நிதி அறிக்கைகளில் உள்ளடங்குவன:

- 31 டிசம்பர் 2022 தேதியில் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய விரிவான வருமான அறிக்கை;
- 31 டிசம்பர் 2022 தேதியில் நிலவிய இருப்புநிலைக் குறிப்பும்;
- அத்தேதியில் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய பங்குமுதல் மாற்ற அறிக்கை;
- அத்தேதியில் முடிவுற்ற நிதி ஆண்டுக்குரிய ரொக்கப் புழக்க அறிக்கை; மற்றும்
- குறிப்பிடத்தக்கக் கணக்குக் கொள்கைகளின் சுருக்கம் உள்ளடங்கும் நிதி அறிக்கைகளின் குறிப்புகள்.

**கருத்துக்கான அடிப்படை**

நாங்கள் சிங்கப்பூர் தணிக்கை தரங்களுக்கு (SSAs) ஏற்ப தணிக்கை செய்தோம். அந்தத் தரங்களின்கீழ் எங்களுக்குள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் *நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளர்களின் பொறுப்புகள்* பகுதியில் மேற்கொண்டு விளக்கப்பட்டுள்ளன.

நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்கள் போதுமானவை என்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்கப் பொருத்தமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம்.

*சுயேச்சைநிலை*

நாங்கள் கணக்கியல் மற்றும் நிறுவன ஒழுங்குமுறை ஆணையத்தின் *நிபுணத்துவ நடத்தைக் குறியீடு மற்றும் பொதுக் கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்கியல் நிறுவனங்களுக்கான நெறிமுறைகள்* (ACRA குறியீடு) ஆகியவற்றின் படியும் சிங்கப்பூரில் நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்வதற்கு அவசியமான நெறிமுறை நிபந்தனைகளின்படியும் வங்கியுடன் சம்பந்தமில்லாத சுதந்திர அமைப்பாகச் செயல்பட்டு, இந்த நிபந்தனைகளுக்கும் ACRA குறியீட்டுக்கும் ஏற்ப எங்களது மற்ற நெறிமுறை பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கிறோம்.

**இதர விவரங்கள்**

இதர விவரங்களுக்கு நிர்வாகம் பொறுப்பாகும். இதர விவரங்களில் நிதி அறிக்கைகளும் அதன் தொடர்பில் நாங்கள் வெளியிட்ட தணிக்கையாளர் அறிக்கையும் தவிர, இயக்குநர்களின் அறிக்கையும் MAS அறிக்கை 608 துணை விவரங்களும் உள்ளடங்கும்.

நிதி அறிக்கைகள் பற்றிய எங்கள் கருத்தில் இதர விவரங்கள் உள்ளடங்கவில்லை. அது தொடர்பாக எந்தவிதமான உறுதியான கருத்தையும் நாங்கள் வெளியிடவில்லை.

நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்வதில், இதர விவரங்களை வாசித்து, அவ்வாறு செய்யும்போது, நிதி அறிக்கைகளுடன் அல்லது தணிக்கையில் நாங்கள் கண்டுபிடித்தவற்றுடன் இதர விவரங்கள் ஒத்திருக்கிறதா அல்லது விவரப் பிழை இருப்பதுபோலத் தெரிகிறதா என்பதைப் பரிசீலிப்பது எங்கள் பொறுப்பு. நாங்கள் செய்த தணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, இதர விவரங்களில் விவரப் பிழை இருப்பதாக நாங்கள் முடிவுக்கு வந்தால், அது குறித்து நாங்கள் தகவல் தெரிவிக்கவேண்டும். இது தொடர்பாக நாங்கள் தகவல் தெரிவிப்பதற்கு எதுவுமில்லை.

**நிதி அறிக்கைகளில் நிர்வாகம் மற்றும் இயக்குநர்களின் பொறுப்புகள்**

இந்த நிதி அறிக்கைகள் சட்டத்திற்கும் FRS தரங்களுக்கும் ஏற்றபடி தயாரிக்கப்பட்டு, உண்மையான மற்றும் நியாயமான கருத்தை வெளிப்படுத்தும் வகையில் படைக்கப்படுவது நிர்வாகத்தின் பொறுப்பாகும். அதோடு, அதிகாரமற்ற உபயோகம் அல்லது விற்பனையில் ஏற்படும் இழப்புகளிலிருந்து சொத்துகள் பாதுகாக்கப்படுவதற்கு நியாயமான உறுதியளிக்கக்கூடிய உள் கணக்கியல் கட்டுப்பாட்டு முறையைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல்; மற்றும் பரிவர்த்தனைகள் முறையான அதிகாரம்பெற்று, உண்மையான நியாயமான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கவும், சொத்துக் கணக்கைக் கட்டிக்காக்கவும் அவசியமான வகையில் பதிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவது ஆகியவையும் இதில் அடங்கும்.

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில், வங்கியால் தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றலை மதிப்பிட்டு, பொருத்தமாயின், இது தொடர்பான விவகாரங்களை வெளியிடுவதும் தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனத்திற்கான கணக்கியல் அடிப்படையைப் பயன்படுத்துவதும் நிர்வாகத்தின் பொறுப்பு. வங்கியைக் கலைக்க அல்லது செயல்பாட்டை நிறுத்த எண்ணினால் அல்லது இவ்வாறு செய்வதைத் தவிர வேறு சாத்தியமான மாற்றுவழி இல்லாத சூழ்நிலைகள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

வங்கியின் நிதிநிலை தாக்கல் நடைமுறையைக் கண்காணிப்பது இயக்குநர்களின் பொறுப்புகளில் உள்ளடங்கும்.

**நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளர்களின் பொறுப்புகள்**

மொத்த நிதி அறிக்கைகளில், மோசடி அல்லது பிழையால், விவரப் பிழைகள் இல்லாதிருக்கிறதா என்பதற்கு நியாயமான உறுதிப் பெற்று, எங்கள் கருத்தை உள்ளடக்கும் தணிக்கையாளர்களின் அறிக்கையை வெளியிடுவதே எங்கள் இலக்கு. நியாயமான உறுதி என்பது உயர் நிலையிலான உறுதியாக இருந்தாலும், சிங்கப்பூர் தணிக்கை தரங்களுக்கு ஏற்ப நடத்தப்படும் தணிக்கை, இருக்கக்கூடிய விவரப் பிழையை எப்போதும் கண்டுபிடித்துவிடும் என்பதற்கு உத்தரவாதமில்லை. மோசடியால் அல்லது பிழையால் விவரப் பிழைகள் ஏற்படலாம். விவரப் பிழைகள் தனியாக அல்லது மொத்தமாக, இந்த நிதி அறிக்கைகளின் அடிப்படையில் பயன்பாட்டாளர்கள் எடுக்கும் பொருளியல் தீர்மானங்களை பாதிக்கக்கூடும் என நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட்டால், அவை முக்கியமானவையாகக் கருதப்படும்.

சிங்கப்பூர் தணிக்கை தரங்களின்படி நடத்தப்பட்ட தணிக்கையின் ஒரு பகுதியாக, தணிக்கை முழுவதும் நிபுணத்துவ மதிப்பீட்டைப் பயன்படுத்தி, நிபுணத்துவ ஐயவாதத்தை நிலைநாட்டினோம். அதோடு நாங்கள்:

(குறிப்பு: நிதிநிலை அறிக்கையின் தொடர்ச்சியை அன்புகூர்ந்து அடுத்த பக்கத்தில் பார்க்கவும்)

BANKOFSINGAPORE

# சுயேச்சை தணிக்கையாளர்களின் அறிக்கை (தொடர்ச்சி)

- மோசடி அல்லது பிழையால் நிதி அறிக்கைகளில் விவரப் பிழைகள் நேரக்கூடிய அபாயத்தை அடையாளம் கண்டு, மதிப்பிட்டு, இந்த இடர்களுக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை மேற்கொண்டு, எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்குவதற்குப் போதுமான, பொருத்தமான தணிக்கை ஆதாரங்களைப் பெறவேண்டும். பிழையால் நேரும் விவரப் பிழையைவிட மோசடியால் நேரும் விவரப் பிழையை அடையாளம் காணாதிருக்கக்கூடிய அபாயம் அதிகம். ஏனெனில், மோசடியில் கூட்டுச்சதி, ஏமாற்று, வேண்டுமென்றே செய்யப்பட்ட விடுபாடுகள், பிறழ்கூற்று அல்லது உள் கட்டுப்பாடு மீறல் ஆகியவை இருக்கக்கூடும்.

- சூழ்நிலைக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைக்க தணிக்கைக்குத் தேவையான உள் கட்டுப்பாட்டைப் பற்றிய புரிந்துணர்வைப் பெறவேண்டும். வங்கியின் உள் கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றி கருத்து தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், நிர்வாகம் செய்த கணக்கியல் உத்தேசங்கள் மற்றும் அது தொடர்பான வெளிப்பாடுகள் ஆகியவற்றின் நியாயத்தையும் பரிசீலிக்கவேண்டும்.

- தொடர்ந்து செயல்படக்கூடிய கணக்கியல் அடிப்படையை நிர்வாகம் பயன்படுத்தியது பொருத்தமானதா என்பது பற்றி தீர்மானிக்கவேண்டும். அதோடு, பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில், வங்கி தொடர்ந்து செயல்படக்கூடிய நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றல் குறித்து குறிப்பிடத்தக்க ஐயம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் தொடர்பான விவர நிச்சயமின்மை இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். விவர நிச்சயமின்மை இருப்பதாக நாங்கள் தீர்மானித்தால், நிதி அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள அது தொடர்பான வெளிப்பாடுகள் குறித்து எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்கவேண்டும், அல்லது இந்த வெளிப்பாடுகள் போதுமானவையாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தைத் திருத்தியமைக்கவேண்டும். எங்களது தீர்மானங்கள், தணிக்கையாளர்களின் அறிக்கை தேதி வரை பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையிலானவை. ஆயினும், வருங்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள், தொகுதி தொடர்ந்து செயல்படக்கூடிய ஆற்றலை இழப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

- வெளிப்பாடுகள் உட்பட, நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த படைப்பு, அமைப்புமுறை, உள்ளடக்கம் ஆகியவற்றையும், நியாயமாகப் படைக்கப்படும் வகையில் அடிப்படை பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் நிதி அறிக்கைகள் பிரதிநிதிக்கிறதா என்பதையும் பரிசீலிக்கவேண்டும்.

தணிக்கையின் திட்டமிடப்பட்ட அளவு, நேரம், தணிக்கையின்போது உள் கட்டுப்பாட்டில் நாங்கள் அடையாளம் காணும் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளிட்ட தணிக்கையின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இதர விவகாரங்களையும் நாங்கள் இயக்குநர்களிடம் தெரியப்படுத்துவோம்.

**மற்ற சட்டபூர்வ, ஒழுங்குவிதி நிபந்தனைகள் குறித்த அறிக்கை**

எங்கள் கருத்துப்படி, இச்சட்டப்படி தேவையான கணக்கு மற்றும் இதரப் பதிவேடுகளை வங்கி சட்டப்படி முறையாகப் பாதுகாத்து வைத்திருக்கிறது.

**PricewaterhouseCoopers LLP**
பொது கணக்காய்வாளர்கள் மற்றும் சாட்டர்ட் கணக்காய்வாளர்கள்
சிங்கப்பூர், 1 பிப்ரவரி 2023

# இயக்குநர்கள்

## இந்த அறிக்கையின் தேதியில் பதவியிலிருந்த வங்கி இயக்குநர்கள்:

Lai Teck Poh, தலைவர்

Choo Nyen Fui, தலைமை நிர்வாக அதிகாரி

Kenneth Mark Lai Chin Kui

Na Wu Beng (1 ஜூலை 2022 அன்று நியமிக்கப்பட்டார்)

Wong Pik Kuen Helen